ஊர்காவற்றுறை பிரதேசசபை

யாழ்ப்பாண மாவட்டம்

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 12 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 11 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்ரெம்பர் 10 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 அபிப்பிராயம்

எனது கணக்காய்வின் மூலம் தென்படுவதும் எனக்கு கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய ஊர்காவற்றுறை பிரதேசசபை 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகள் பேணி வருவருவதுடன் தவிசாளருக்கு என்னால் வழங்கப்பட்ட அறிக்கையில் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படுத்தப்பட்ட தாக்கங்களை தவிர கணக்கீட்டு நியமங்களின்படி ஊர்காவற்றுறை பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உள்ளவாறாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள், வருமானங்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம | சொத்துக்கள் | | வருமானங்கள் | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| அதிகரித்துக் கூறல்கள் | 01 | 1,186 | 01 | 106,000 | | |
| வகைப்படுத்தல் வழு | - | - | 01 | 56,700 | | |
| விடுபாடுகள் | | | | | 01 | 3,962,724 |

### 1.3.2 செயற்படாத வங்கி கணக்கு

---

தேவரதம் படகு தொடர்பிலான வருமான சேகரிப்பு மற்றும் செலவினங்கள் தொடர்பாக ஆரம்பிக்கப்பட்ட மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கு இலக்கம் 726 ஆனது 2002ம் ஆண்டிலிருந்து செயற்படாது வங்கி மீதியாக் ரூபா 165,201 காணப்படுகின்றது.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

---

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 88இ178இ965 பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

---

2.1 நிதிசார் விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் வருமானத்திலும் கூடிய செலவின மிகையாக ரூபா 2இ641இ627 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 11இ383இ489 விளைந்திருந்தது.

2.2 நிதிசார் கட்டுப்பாடு

---

(அ) பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 6இ805இ200 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 5இ785இ002 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) வருமானங்களில் மேலதிகம் ஏற்படும்போது சபையானது மீள் வருமான மதிப்பீடு தயாரித்து அதற்கான அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளாமல் நிலையான வைப்பில் ரூபா 1இ200இ000 மக்கள் வங்கி ஊர்காவற்றுறையில் இடப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| இறைகளும் வரிகளும் | 17 | - | |
| குத்தகை வாடகைகள் | 2,498 | 1,274 | |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 476 | 279 | |
| வேறு வருமானங்கள் | 25,019 | 19,651 | 4,190 |
| | 28,010 | 21,204 | 4,190 |

### 2.3.2 நீதிமன்றத் தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச்சட்டங்களின் கீழ் நீதவான் நீதிமன்றத்திலிருந்து பெறப்பட வேண்டிய 2012ம் ஆண்டுக்கான நீதிமன்றக் தண்டப்பணங்களும் ருபா.1,052,175 அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.3 முத்திரைத்தீர்வைக் கட்டணம்

(i) 2010,2011ம் ஆண்டிற்கான முத்திரைத்தீர்வைக் கட்டணங்கள் ரூபா 1.683இ880 இற்கான விபரப்பட்டியல் காணிப்பதிவாளர் நாயகத்தில் பெறப்பட்டதேயன்றி திறைசேரியிலிருந்து வருமதியான முத்திரைத் தீர்வையினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

(ii) மீளாய்வாண்டுக்குரிய முத்திரைத் தீர்வை கட்டணப் பெறுமதி ரூபா.1,040,590வுக்குரிய பட்டியல் காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

2.4 சொத்து முகாமைத்துவம்

2.4.1 பயன்படுத்தப்படாத பௌதீக சொத்துக்கள்

சபைக்கு சொந்தமான பின்வரும் சொத்துக்கள் பயன்படுத்தப்படாது உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

| சொத்துக்களின் விபரம் | பெறுமதி ரூபா | பயன்படுத்தப்படாத காலப்பகுதி |
|---|---|---|
| இரண்டு சக்கர உழவு இயந்தரம் சுசுயுே அன்பளிப்பு | 100,000 | 2002 இலிருந்து இன்றுவரை |
| இரண்டு சக்கர உழவு இயந்தரம் சுசுயுே அன்பளிப்பு | 150,000 | 2002 இலிருந்து இன்றுவரை |
| தேவரதம் படகு | பெறுமதி மதிப்பிடவில்லை | 2008 இலிருந்து இன்றுவரை |

2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

---

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத பின்வரும் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| <u>1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் (நிதி நிர்வாக ஒழுங்கு) விதி</u> | <u>விபரம்</u> |
|---|---|
| அத்தியாயம் ஐஐ பிரிவு 4 | சபையினால் ஆதனவரி மதிப்பீடு தொடர்பாக மதிப்பீட்டு பதிவேடு பேணப்படாததுடன் வீதவரி அறவீடு சபையினால் செய்யப் பட்டிருக்கவில்லை. |
| அத்தியாயம் ஐ பிரிவு 97 | நிகழ்ச்சி குறியீடு செலவின விடயங்கள் என்பவை வரவு செலவுத் திட்டத்தில் காட்டப்பட்டவாறு உரிய முறையில் உறுதிச் சீட்டுகளில் காட்டப்படுவதில்லை. |
| அத்தியாயம் ஏ பிரிவு 120 | உரிய திகதிகளில் முற்பணம் செலுத்தத் தவறும்போது செயலாளர் நடவடிக்கை எடுக்காமையால் முற்பணக் கணக்கு மீதி ரூபா 1,615,251 ஆக காணப்பட்டுள்ளது. |
| அத்தியாயம் ஐஐஐ பிரிவு 66 | ரூபா 217,978 நிலுவையை அறவிட செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| <u>இலங்கை சனநாயக சோசலிக குடியரசின் நிதி ஒழுங்குவிதி</u> | |
| நிதி ஒழுங்கு விதி 271 | காலங்கடந்த வைப்புக்கள், கொடுபடாத சம்பளங்கள் ரூபா 1,609,000 உரிய நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ந்தும் மீதியாக காணப்படுகின்றது. |

| | |
|---|---|
| 2002 ஆம் ஆண்டின் 14ம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டம் | 2006 – 2012 ஆம் ஆண்டு வரை ரூபா 1இ024இ906 தொகையான பெறுமதி சேர் வரிப்பணம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படாது நானாவித வைப்புக் கணக்கில் உள்ளக்கப் பட்டுள்ளது. |
| 2009 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தேசத்தை கட்டி யெழுப்பும் வரி அதிகாரச் சட்டம் | 2012ம் ஆண்டில் அறவிடப்பட்ட தேசத்தை கட்டியெழுப்பும் வரி ரூபா 54218 உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படாது வைப்பு கணக்கில் உள்ளடக்கப் பட்டுள்ளது. |

2.6 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்

2009 ஜனவரி 28ம் திகதிய வடமாகாண திறைசேரி சுற்றுநிருப இலக்கம் ீவு.ஃ.01.ஃ.2009 இன் ஐஐம் பந்தியின் பிரகாரம் பயன்படுத்தப்பட முடியாத பொருட்களின் ஏல விற்பனைக்கான கடமைக் கொடுப்பனவினை தவறாக 2011ஆம் ஆண்டின் அழிப்புச்சபைக் கடமைக்கான கொடுப்பனவாக ரூபா 2,500 மீளாய்வாண்டில் வழங்கப்பட்டுள்ளது.

2.7 நிறைவேற்றப்படாத செயற்திட்டங்கள்

2012ம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்திற்கான மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்ட இரண்டு மூலதன வேலைகள் ரூபா 1,450,000 முற்றாக நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. ஆயினும் சபை நிதி அபிவிருத்தி வேலைக்குப் பயன்படுத்தப்படாது ரூபா 1,200,000 மக்கள் வங்கியில் நிலையான வைப்பில் வட்டி வருமானம் பெறும் நோக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

2.8. செயற்பாடுகளின் செயற்தினின்மை

அ. 2006 – 2010 ஆண்டு உள்ளுராட்சி ஆணையாளரினால் வழங்கப்பட்ட சனசமூக நிலைய, மற்றும் மலசலகூட நன்கொடைகள் ரூபா 189,978 குறித்த

நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது நானாவித வைப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

(ஆ) அரச அதிபரினால் 2002ம் ஆண்டில் வழங்கப்பட்ட சேரி ஒழிப்பு மற்றும் குடிநீர் விநியோகத்திற்காக வழங்கப்பட்ட நன்கொடைகள் ரூபா 950,000 பயன்படுத்தப்படாது ஏனைய வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(இ) இறந்த, பதவி வறிதாக்கப்பட்ட அலுவலர்களுக்கு ஏற்கனவே கடந்த காலங்களில் செலவினமாக வகைப்படுத்தப்பட்டு செலுத்தப்படாத சம்பளங்கள் ரூபா 395இ138 உரிய நபர்களிற்கு செலுத்துவதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.9 உள்ளகக் கணக்காய்வு
---------------------------------------

பிரதேச சபையில் போதிய உள்ளகக் கணக்காய்வு இடம் பெற்றிருக்கவில்லை.

3 . முறைமைகளும் கட்டுப்பாடுகளும்
-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் கட்டுப்பாட்டு பகுதிகளில் விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

i. வருமானசேகரிப்பு
ii. நிலையான சொத்துக்கள்
iii. மாதாந்தக்கூட்டப் குறிப்புகள்
iv. கணக்கீடு
v. மனிதவள முகாமைத்துவம்
vi. நன்கொடை
vii. வாகனங்களின் பயன்பாடு
viii. நானாவித வைப்புக்கள்
ix. வரவு செலவுத்திட்ட கட்டுப்பாடு.